www.padippakam.com

# புனர்வாழ்வுப்பணியில் TRO முன்னணி வகிக்கிறது



செ. யோகநாதன்
செயலாளர்
தமிழர் புனர்வாழ்வுக்கழகம்

1990 யூன் மாதம் யுத்தம் ஆரம்பிக்கப்பட்டவுடன் எந்தவிதமான உதவிகளும் அற்ற நிலையில், உள்ளூரில் மக்களின் ஆதரவுடன், முடிந்தவரை எமது சேவைகளை செய்துவந்துள்ளோம். இக் காலத்தில் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் எடுத்த முன்முயற்சியால் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலுள்ள சமுகசேவை அமைப்புக்களை (NGOs) ஒன்றிணைத்து அவ்வம் மாவட்டங்களின் அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையங்களை (NGO Council) ஏற்படுத்தினோம்.

இதுவரைகாலமும் ஒன்றிணைந்து செயற்படா திருந்த நிறுவனங்கள் ஒன்றிணைந்ததன் மூலம் 1990 ஜூன் முதல் டிசம்பர் வரையான மிகவும் நெருக் கடியான காலத்தில் மிகவும் சுலபமாக முகம் கொடுக்க முடிந்தது.

1991 இல் படிப்படியாக வெளியுலகத் தொடர்புகள் கிடைக்க ஆரம்பித்தன. எமது வெளிநாட்டுக் கிளைகள் மூலம் எமக்கு உதவிகள் கிடைத்தன. அதே வகையில் ஏனைய நிறுவனங்களும் நிதி வசதிகளைப் பெற வாய்ப்புக் கிடைத்தது.

1990 இல் எமது முக்கிய பணியாக உணவு, உடை போன்றவை உடனடியான நிவாரண உதவிகளாக அமைந்தன. 1991 இல் நிலைமையில் மாற்றம் ஏற்பட்டது. இடம்பெயர்ந்த மக்களது முகாம்களுக்கு மிகவும் குறைந்த அளவில் அரசாங்கம் நிவாரணம் வழங்கத் தொடங்கியது.

இப்படியான நிலையில் எம்போன்ற நிறுவனங்கள் பாடசாலை, கோயில்கள் போன்ற பொது இடங்களில் தங்கியிருந்த மக்களுக்கான குடியிருப்பு வசதிகளை ஏற்படுத்தல், அந்த மக்களை தொழில் முயற்சிகளில் ஈடுபடுத்தல், குழந்தைகள், தாய்மார்களது போஷாக்கு நிலையை கவனித்தல் என்ற வகையில் எமது வேலைத்திட்டங்களை வகுத்துக் கொண் டோம்.

1991 மத்திக்குப் பின்னர் குடியிருப்புக்களை அமைக்கும் பணிகளில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் அரசும் ஓரளவான பாத்திரத்தை வகிக்க முன் வந்தபோது எமது பணிகள் வேறுவகைகளில் விரிவுபட வாய்ப்பேற்பட்டது.

1990 ஜூன் முதல் 91 பிற்பகுதிவரை அரசின் பொரு ளாதாரத் தடைகளைப் பயன்படுத்தி இயந்திரங்கள், மின்சாரம் இல்லாத நிலையிலேயே விவசாயம், சிறு கைத்தொழில்கள் மூலம் உள்ளூர் உற்பத்திகளைப் பெருக்குவதற்கான தொழிற் திட்டங்களை வகுத்துச் செயற்படுத்தினோம். இதன்மூலம் மிகப்பெருந் தொகையான மக்கள் தொழில் வாய்ப்புக்களை பெற்று நல்ல வருவாயையும் பெற்றனர்.

இந்நிலையில் தமிழீழப்பகுதிகளில் உள்ளூர்ப் பொருளாதாரத்தில் ஏற்படுகின்ற வளர்ச்சியின் அபாயத்தன்மையைப் புரிந்துகொண்ட அரசு 1991 பிற்பகுதியிலிருந்து தமிழீழப் பகுதியில் உற்பத்தி யாகுகின்ற பொருட்களை தாராளமாக எடுத்துச் செல்ல அனுமதித்தது. தமிழீழப் பகுதிகளில் வசதிகளற்ற நிலையில் அதிக உற்பத்திச் செலவு களுடன் உற்பத்தியாகும் பொருட்கள் தென்னிலங் கையிலிருந்து வசதிகளுடன் குறைந்த உற்பத்திச் செலவுகளுடன் உற்பத்தியாகும் பொருட்களுடன் போட்டி போட முடியவில்லை.

இந்நிலையில் எமது மக்கள் மீண்டும் தொழில் இழக்கின்ற நிலைக்குத் தள்ளப்பட்டுவருகின்றனர். இந்நிலையில் மிகவும் சாதுரியமாகத் திட்டமிட்டு புதிய புதிய தொழில் வாய்ப்புக்களை இனங்கண்டு மக்களை தன்னம்பிக்கையுடன் செயற்பட வைக்க வேண்டியுள்ளது.

தொழில் வாய்ப்பின்மையும் போசாக்கான உணவின் மையும் எமது மக்களின் போசாக்கு நிலையில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. குழந்தைகளும் தாய்மார்களும் மிகவும் பாதிக்கப் பட்டுள்ளனர். மாணவர்களது கல்வி பாதிக்கப் பட்டுள்ளது. பெருமளவான மக்கள் மனோரீதியாகக் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

தமிழர் புனர்வாழ்வுக்கழகம் யாழ். மாவட்டத்திலுள்ள


4 ம் பக்கம்........



படிப்பகம்

www.padippakam.com

# பாதிக்கப்பட்ட பெண்களும் அவர்களின் புனர்வாழ்வும்



வசந்தி பிரான்ஸிஸ்

தமிழன் தான் இன்னமும் அன்னியனுக்கு, அதாவது சிங்கள இனவாத அரசின் அராஜகத்துக்கு அடிபணிதல் ஆகாதென தன்னுணர்வுகொண்டு விழிப்படைந்து தனக்கென்றொரு நாடு தேவை எனக் கங்கணங் கட்டிக் கொண்டு போராடத்தொடங்கி இன்றைக்குப் பல ஆண்டுகள் நழுவிச் சென்றுவிட்டன. தமிழீழத்தின் வளங்களினால் தேசிய வருமானத்தின் பெருமளவைப் பெற்றுவரும் சிங்களவனுக்கு அத்தமிழீழத்தை உரியவர்களிடம் கொடுத்துவிட மனமில்லை. இக்காரணத்தால் தமிழீழத்தில் வாழும் தமிழர்களை முற்று முழுதாக அழிக்கும் முயற்சியில் கடுமையான இராணுவ நடவடிக்கைகளையும் கொடுமையான வன்முறைகளையும் செய்துவருகிறது சிங்கள இனவாத அரசு என்பது நாம் யாவரும் அறிந்ததொரு விடயமேயாகும்.

இப்படியான மூர்க்கத்தனமான இராணுவ நடவடிக்கைகளாலும் எமது சமுதாயத்தின் மூடத்தனமான கொள்கைகளாலும் பெருமளவில் பாதிக்கப்பட்டவர்களாக எமது பெண்களே இருந்துவருகின்றனர். தமிழீழப் போராட்டமானது உச்சக்கட்டத்தை அடைந்துகொண்டிருக்கும் இக் காலகட்டத்தில் பல்வேறு பிரச்சனைகட்கு முகம் கொடுக்கவேண்டியவர்களாகவும் அவற்றிற்குத் தீர்வுகாணவேண்டியவர்களாகவும் பெண்களே காணப்படுகின்றனர்.

போரால் ஏற்பட்ட அழிவுகளாலும் இழப்புக்களாலும் ஏற்பட்ட துன்பங்கள் ஒரு பக்கமும்; சமுதாயத்தின் மூடத்தனமான சட்டதிட்டங்களும் பாரம்பரியங்களும் மறுபக்கமுமாக நம் தமிழீழப் பெண்குலத்தை ஆட்டிவைக்கின்றன. இராணுவத்தின் கொடிய, அரக்கத்தனமான கொலைவெறிக்கு கணவனை, பிள்ளைகளை, பெற்றவரை, உடன்பிறந்தவரை இழந்து அல்லற்படும் பெண்கள் சிலர்; அகதி முகாம்களில் தங்கியிருந்துகொண்டு தமக்கொரு விடிவுகாலம் பிறக்காதா எனக் கேள்விக்குறியாக தமது நாட்களைக் கடத்திக்கொண்டிருக்கும் பெண்கள் சிலர்; கணவர், பிள்ளைகள் காணாமற்போய் அவர்களது சடலங்கள் கூடக் கிடைக்காத நிலையில் அவர்கள் உயிருடன் இருக்கிறார்களா, இல்லையா என அறியாது தவித்துக்கொண்டிருப்பவர் சிலர். பாலியல் வன்முறைக்கு உள்ளானவர்கள் சிலர்.

இவ்வாறு எத்தனையோ வேதனைகட்கும் விரக்திக்கும் உள்ளாகி வழிதெரியாது வாடிநிற்கும் பெண்களுக்கு வழிகாட்டவும் அவர்களுக்கும் அவர்கள் மேல் ஒரு தன்னம்பிக்கையை வளரச்செய்யவும் தமிழீழத்தில் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான புனர்வாழ்வுப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப் பட்டுவருகிறது. இப் புனர்வாழ்வுப் பிரிவானது யாழ்ப்பாணத்தில் போரினால் பாதிக்கப்பட்ட பல்வேறு இடங்களில் தமது புனர்வாழ்வுநிலையங்களைத் தொடங்கி அங்குள்ள பாதிக்கப்பட்ட பெண்களுக்கு பல வழிகளிலும் உதவிகளைச் செய்துவருகின்றது.

இங்குள்ள பாதிக்கப்பட்ட பெண்களின் பிரதான பிரச்சனையாக அவர்கள் முன்னே கேள்விக்குறியாக நீண்டுகிடக்கும் எதிர்காலமே இருக்கின்றது. தமது நாளாந்த சீவியத்தை எவ்வாறு கஷ்டமின்றி ஓட்டிச் செல்லலாம்? தமது குழந்தைகட்கு எவ்வாறு வளமான ஒரு எதிர்காலத்தைக் கொடுக்கலாம் என எண்ணி எண்ணியே மனத்தாலும் உடலாலும் நலிந்தவர்களாகின்றனர்.

இவ்வகையான பெண்களை

4 ம் பக்கம்.......



படிப்பகம்

www.padippakam.com

# கேட்கிறதா எங்கள் குரல்

அன்புள்ள உடன் பிறப்புக்களே!

எங்கள் சொத்துக்களையும், சொந்தங்களையும், வீடுகளையும், இழந்து அவலநிலையில் நாங்கள் இப்பொழுதும் அகதிமுகாம்களில் தான் தங்கியுள்ளோம். சிறிலங்கா அரசின் பாரிய பொருளாதாரத் தடையினாலும், இராணுவநடவடிக்கைகளினாலும், இங்கு உணவுவகைகள், குழந்தைகளுக்குப் பால்மா வகைகள், மருந்துவகைகள், அத்தியாவசியப் பொருட்கள் கிடைப்பது மிகவும் கஷ்டமாகவுள்ளது. குழந்தைகளில் பலர் அகதி முகாம்களில் பரவிய வாந்திபேதி நோயினாலும், போஷாக்கின்மையினாலும் இறந்துவிட்டார்கள். இருந்தும் நாங்கள் மனத்துணிவினை இழக்கவில்லை. எப்படியும், உங்கள் எல்லோரின் இனிய முகங்களையும் காணபதற்காக இந்த உயிர் தரித்து நிற்கின்றோம். வயதானவர்களும் நோயாளர்களும் கர்ப்பிணித் தாய்மார்களும் படும் அவலங்களை எழுதிடச் சொற்கள் இல்லை. அடிக்கடி, உங்களைக் கஷ்டப்படுத்தி பெற்றுக்கொள்ளும் நிவாரணங்களை நம்பி எத்தனை நாட்கள் வாழ்வது, எங்களுடைய கால்களில் நின்று உழைத்து வாழும் நிலை எப்பொழுது வருமென்று எண்ணி வாடுகின்றோம்.

உணவுக்கஷ்டத்தினால் எத்தனையோ நாட்கள் சாப்பிட்டும், சாப்பிடாமலும் காலத்தை ஓட்டிக் கொண்டிருக்கின்றோம். இன்னும், கொஞ்ச காலங்களில் நாங்கள் பட்டினியால் இறந்து விடுவோமென்ற பயத்தில்தான் இம்மடலை அவசரமாக வரைகின்றோம். நாங்கள், இறப்பதற்குப் பயப்படவில்லை, எங்கள் உடன்பிறப்புக்களின் முகங்காண, உயிர் வாழவேண்டுமே, உயிர்வாழ்வதற்கு உணவு வேண்டும். எங்கள் உடன் பிறப்புக்களே! நாங்கள் அல்லலுற்று வாடும் பொழுதாவது சிறிதளவு நிதியுதவி செய்யுங்கள். எங்களிற்கு கேட்பதற்கு உரிமையும், உங்களுக்கு கொடுப்பதற்குக் கடமையும் இருப்பதாற்தான் கேட்கின்றோம்.

வெளிநாடுகளில், எங்களைப்போல் "முகம் இழந்த மனிதர்களாய்" நீங்கள் வாழும் பரிதாப் நிலையை அறிவோம். என்ன செய்வது, எங்களது கஷ்டத்தினையும், அவலத்தினையும், சோகத்தினையும் பாடி உங்களை மேன்மேலும் சோகத்தில் தள்ளி விடுகின்றோம் என்ற பரிதவிப்பு எங்கள் நெஞ்சிற்குள்ளுண்டு' என்றாலும், அன்னிய மனிதனிடமா எங்களது அவலநிலையைச் சொல்லிக் கொண்டிருக்கின்றோம்; இல்லை எங்கள் உடன் பிறப்புக்களிடம் தான் என்ற நெருங்கிய உறவினால் தேறுதல் பெறுகின்றோம்.

எங்களுக்கு அரசுசார்பற்ற நிறுவனங்கள் மிகவும் கஷ்டமான நிலைமையிலும் நிவாரணங் களை வழங்கிக் கொண்டிருக்கின்றன. வேலைப்பழுவினாலும், குடும்ப நெருக்கடி களினாலும், நீங்கள் வாழும் நாடுகளின் காலநிலைச் சோம்பலினாலும் இம் மடலைக் கவனியாது விட்டுவிடாதீர்கள். நீங்கள் எங்களை மறந்துவிட்டால் , நாங்கள் எங்கள் உயிரினை மறந்துவிடவேண்டி வந்துவிடும். ஆகவே இம் மடலை தந்தி போல் பாவித்து உடனடி நட வடிக்கை எடுக்கவும்.

அடுத்த மடலில் உங்கள் எல்லோரையும் சந்திக்கின்றோம்.

இப்படிக்கு,<br>
என்றென்றும் உங்கள்<br>
உடன் பிறப்புக்கள்.

www.padippakam.com

புனர்வாழ்வுப்பிரிவானது முன்னேற்றமடையச்செய்வதற்காக அயராது உழைத்துவருகிறது. பாதிக்கப்பட்ட பெண்களை நேரில் சந்தித்து அவர்களிடம் பேசி, அவர்களது பிரச்சனைகளை அறிந்து அதற்கேற்ற தீர்வுகளை எடுத்துவருகிறார்கள். பலவிதமான சிறு கைத்தொழில் நிலையங்களை ஏற்படுத்தி பாதிக்கப்பட்ட பெண்களை அங்கு வேலைக்கு அமர்த்தி வருகின்றனர். இதனால், அவர்களுக்கு ஊதியம் கிடைப்பதோடு, அவர்கள் தமது கஷ்டங்களை மறந்து சந்தோசமாக இருக்கவும் முடிகிறது.

சிற்றுண்டிகள் தயாரித்தல், அப்பளமிடுதல், றெடிமேற் ஆடைகள் தயாரித்தல், தும்புக்கைத்தொழில், சிறுவர் பாடசாலைகள் நடாத்துதல் போன்றவை இவற்றிற் சிலவாகும். இவ்வகையாக வேலை செய்வதன் மூலம் நாம் பெண்களை எவ்வித தாழ்வு மனப்பான்மையுமின்றி யாரிடமும் கைநீட்டாமல் தம் வயிற்றைத் தாமே கழுவிக்கொள்ளும் பெருமையுடன் தன்னம்பிக்கையுடன் வாழவைக்கக்கூடியதாகவுள்ளது.

அப்படியான சிறு கைத்தொழில் நிலையங்களில் வேலையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் பெண்களின் எண்ணிக்கையிலும் பார்க்க பாதிக்கப்பட்ட பெண்களின் எண்ணிக்கை பன்மடங்காக உள்ளதாக ஒரு ஆய்வறிக்கை கூறுகிறது. அனைத்துப் பாதிக்கப்பட்ட பெண்களையும் வேலைக்கு அமர்த்தும் முகமாக பல்வேறு தொழில் முறைத்திட்டங்களை விரிவுபடுத்துவதற்கு முக்கிய தடையாக பொருளாதாரப்பிரச்சனை இருக்கின்றது.

இப் பொருளாதாரப் பிரச்சனையைக் கொஞ்சமாவது குறைப்பதற்கு வெளிநாட்டில் வாழும் பெண்களாகிய நாம் எவ்வகையான உதவியைச் செய்யலாம்? நாம் அனாவசியமாகச் செலவிடும் பணத்தில் ஒரு சிறிய பகுதியையாவது நம் தமிழீழப் புனர்வாழ்வுப் பிரிவிற்கு வழங்குவோமாயின் அங்கு அபலைகளாக்கப்பட்ட எமது சகோதரிகளுக்கு ஒரு புது வாழ்வை அளிப்பதற்கு மிகவும் உதவியாக இருக்கும்.

நமது தாய்நாட்டிற்கான உரிமைப் போராட்டத்தில் இப்படியாவது எமக்கு ஒரு சிறிய பங்கு கிடைக்கிறது என்ற மனத்திருப்தியுடன் எம் தமிழீழப் பெண்களுக்கு உதவ இன்றே முன்வருவோம்.

**புனர்வாழ்வுப்பணியில்....**

**14 உதவி அரச அதிபர் பிரிவுகளில் தெல்லிப்பளை, பருத்தித்துறை, மருதங்கேணி என்ற 3 உதவி அரச அதிபர் பிரிவுகளில் உள்ள முகாம்களில் மக்களைப் பராமரித்து வருகின்றது.**

**அத்துடன் தீவகத்திலிருந்து இடம்பெயர்ந்து வந்து பாடசாலைகளில் தங்கியிருந்த மக்களை சாவகச்சேரிப் பிரிவில் கெற்பலி என்ற இடத்தில் குடியமர்த்தியுள்ளது. இப் பணியை யாழ். அரச செயலகத் துடன் இணைந்து செயற்படுத்திவருகிறது.**

**கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்துவந்த மக்களைப் பராமரிக்கும் பணிகளை முல்லைத்தீவு மாவடடத்தில் விசேடமாக கவனித்துவருகிறோம். முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா மாவட்டங்களில் எமது விவசாய ஊக்குவிப்புத் திட்டங்கள் மிகவும் நல்ல முறையில் செயற்பட்டுவருகின்றன.**

**கிளிநொச்சியில் காந்தி சேவா சங்கம் என்ற அமைப்பின் பெயரில் எம்மால் பராமரிக்கப்படும் சிறுவர் இல்லத்தில் 87 ஆதரவற்ற சிறுவர் சிறுமியர் தங்கியுள்ளனர். இவர்களுக்கான கடுமையான வசதிகளை ஆரம்பத்தில் எம்மால் செய்துகொடுக்க முடியாதிருந்தபோதும் தற்போது மிகவும் சிறந்த முறையில் இவர்களைப் பராமரித்துவருகிறோம். இவர்களுக்கான வருமானத்தைக் காரணமாகக் கொண்டு கோணாவில் என்ற இடத்தில் ஓர் விவசாயப் பண்ணையையும் நடத்திவருகிறோம்.**

**இவர்களது எதிர்கால நலன் கருதி தொழிற் பயிற்சிகளை ஒழுங்கு செய்துவருகிறோம். எங்களுடைய நேரடியான பணிகளுடன் ஏனைய ஸ்தாபனங்களையும் துரிதமாகச் செயற்பட வைப்பதற்காக ஒத்துழைப்புகளை வழங்குகிறோம். 1993 ம் ஆண்டு கடந்த ஆண்டிலும் பார்க்க அதிக மான பணிகள் எமக்கு உள்ளதை உணரமுடிகிறது. இப்போது மக்கள் உரிமையுடன் எமது உதவியை நாடிவருகிறார்கள். தமிழர் புனர்வாழ்வுக்கழகம் தனது பணிகளை விரிவாக்கவும் எமது மக்களது வாழ்வில் நம்பிக்கையை ஏற்படுத்தவும் ஆர்வமாகவும் தயாராகவும் உள்ளது. இவ்விடயத்தில் எமது மக்களை, மண்ணை நேசிக்கின்ற உலகு பூராவும் பரந்து வாழுகின்ற எமது மக்களின் தாராளமான உதவிகளை எதிர்பார்க்கிறோம்.**

**தமிழர் புனர்வாழ்வுக் கழகம் - பிரெஞ்சுக்கிளை (T. R. O)**
**188, RUE ORDENER , 75018 PARIS, TEL: 42 63 24 87.**



படிப்பகம்